<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்</u>

அசல் வழக்கு எண்.40/2021 நாள்– 03.01.2026

வாதியின் / பிரதிவாதியின் பி.வா.சா.2 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.இரா.கோகிலாவாணி, Gr.III பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்– சந்திரகுமார் தந்தையின் பெயர்–

(உதவி மின்பொறியாளர்) (பி.வா.சா.2)

விலாசம்– தாலுகா–

வயது– தொழில்

நான் தற்போது விருதுநகர் மின்பகிர்மான வட்டத்தில் துலுக்கப்பட்டி பிரிவில் உதவி மின்பொறியாளராக பணி செய்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல வந்திருக்கிறேன். கோகுலம் பெட்ரோல் பங்குடன் இணைந்த கோகுலம் டீ ஸ்டாலில் மின் இணைப்பை அதன் உரிமையாளர் கேட்டு கொண்டதற்கு இணங்க மின் இணைப்பானது தூண்டிக்கப்பட்டது. என்னிடம் காண்பிக்கப்படும் மின் துண்டிப்பிற்கான கணினி ஆவணம் **பி.வா.சா.ஆ.4** ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமானது மின் இணைப்பு துண்டிப்பிற்காக பணம் செலுத்தப்பட்டு அலுவலகத்திலிருந்து வழங்கப்பட்ட ரசீது **பி.வா.சா.ஆ.5** ஆகும். பொதுவாக மின் இணைப்பை துண்டிப்பதற்கு முன்பாக அந்த இடத்தில் இருக்கும் நபரின் அனுமதியில்லாமல் மின் இணைப்பை துண்டிக்க முடியுமா என்றால் முடியாது.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) அழைப்பாணையின் பேரில் சாட்சி சொல்ல வந்த எனக்கு இவ்வழக்கின் தரப்பினர் குறித்தும், வழக்கை குறித்தும் நன்கு தெரியும் என்றால் சரிதான். இவ்வழக்கின் தரப்பினர்களுக்குள் என்ன பிரச்சனை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது, வாடிக்கையாளர் ஆன்லைனில் மின் இணைப்பை துண்டிப்பதற்காக

வேண்டுகோள் விட்டார். அதற்கு ஏற்ப நாங்களும் கள ஆய்வு செய்து சம்பவ இடமானது பூட்டப்பட்டிருந்ததால் மின் இணைப்பை துண்டிப்பு செய்துவிட்டோம்.

2) அழைப்பாணையானது கதவு எண்.81B உள்ள கடைக்கு மின் துண்டிப்பு சம்மந்தமாக சாட்சி சொல்லுவதற்கு தான் வந்தது என்றால் சரிதான். மின் இணைப்பானது லட்சுமிதேவி என்பவரின் பெயரில் உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் கதவு எண்.3/242B என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் கதவு எண். 81B க்கும் நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் கதவு எண்.3/242B க்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான்.

3) வழக்கின் சம்மந்தப்பட்ட இடத்தின் உரிமையாளர் லட்சுமிதேவி என்றால் சரிதான். வாடிக்கையாளர் ஆன்லைனில் மின் இணைப்பை துண்டிப்பதற்காக வேண்டுகோள் விட்டார் என்று சொல்லியுள்ள நிலையில் அதற்குரிய காரணத்தை குறிப்பிட்டுள்ளாரா என்றால் குறிப்பிட்டுள்ளார், கடையானது தற்போது பயன்பாட்டில் இல்லை என்பதற்காக மின் இணைப்பை துண்டிப்பு செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். மேற்படி வேண்டு கோள் கடிதத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

4) வாதிக்கும் பிரதிவாதிக்கும் ஏற்கனவே பிரச்சனை உள்ள காரணத்தினால் பிரதிவாதி வாதியை இடையூறு செய்ய வேண்டும் என்பதற்காக கள ஆய்வு செய்ததாக சொல்லி பயன்பாட்டில் உள்ள கடையின் மின் இணைப்பை துண்டித்து, தற்போது பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி கடையில் வாதி வசித்து வந்தார் என்றும், கடையானது பயன்பாட்டில் இல்லை என்று காரணம் குறிப்பிட்டு வந்த வேண்டுகோள் கடிதத்தை பிரதிவாதிக்கு ஆதரவாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இதன் நிமித்தம் வாதிக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல.